# 108 திவ்யதேச ஸ்தலங்கள்



# 39. திருப்பார்த்தன் பள்ளி



[Google Maps]

**கவள யானைக் கொம்பொசித்த**
**கண்ணனென்றும் காமருசீர்க்**
**குவளை மேக மன்ன மேனி**
**கொண்ட கோனென் னானையென்றும்**
**தவள மாட நீடு நாங்கைத்**
**தாமரையாள் கேள்வ னென்றும்**
**பவள வாயா ளென் மடந்தை**
**பார்த்தன் பள்ளி பாடுவாளே - (*1318*)**

பெரிய திருமொழி 4-8-1

என்று திருமங்கையாழ்வார் தன்னையே தாயாகவும், மகளாகவும் பாவித்துக் கொண்டு தன் மகள் பார்த்தன் பள்ளி எம்பெருமானைக் கண்டு, யானையின் கொம்பை முறித்த கண்ணனேயென்றும், குவளை மலர் போன்றும், மேகம் போன்ற வண்ணம் கொண்ட எனது மன்னனென்றும், யானை போன்றவனென்றும், திருநாங்கூருக்கு அருகில் உள்ள பார்த்தன் பள்ளியில் உறைகின்ற தாமரையாள் கேள்வனென்றும், பாடி மயங்கிக் கொண்டேயிருக்கிறாள் என்கிறார்.

இத்தலம் மிக அழகான கிராமியச் சூழலில் அமைந்து தோப்பும், காடும், வயலும், குளமும் சூழ அமைந்துள்ளது.

சீர்காழியிலிருந்தும் இத்தலத்திற்குச் செல்லலாம். திருவெண்காட்டிலிருந்து சுமார் 2 மைல் தூரம். திருவெண்காட்டிலிருந்து நடந்தே செல்லலாம்.

## வரலாறு

இத்தலம் பற்றி பாத்ம புராணம் பேசுகிறது. அர்ஜூனன் இவ்விடத்திற்கு வந்தபோது அதிகமான தாக வேட்கை யுண்டாக இங்கே தவம் செய்து கொண்டிருந்த அகத்தியரிடம் குடிப்பதற்கு தண்ணீர் கேட்க, அகத்தியர் கமண்டலத்தை நோக்க அதில் இருந்த நீரும் வற்றிப்போனது.

இவ்வாறு தண்ணீர் வற்றிப்போவதற்கு என்னவென்று அகத்தியர் ஆராய்ந்து ஞான திருஷ்டியில் இது கண்ணனுடைய வேலையென்று தெரிந்து கொண்டு, அர்ஜூனனை நோக்கி அர்ஜூனா நீ எப்போதும், எந்த உதவி வேண்டுமானாலும் உன் ஆபத்பாண்டவனான கண்ணனையல்லவா அழைக்க வேண்டும் என்று கூற, அர்ஜூனனும் தன் தவறை உணர்ந்து உடனே கண்ணனை நினைக்க கண்ணன் அவ்விடத்தே வந்து கத்தி ஒன்றை அர்ஜூனனிடம் கொடுத்தான்.

அக்கத்தியால் மண்ணைக் கீண்டிப் பூமியைப் பிளக்க உடனே அங்கு தூய கங்கை நீர் பெருகியது. தாகந்தீர்த்த விஜயன் கண்ணனால் இவ்விடத்து சிறிது ஞானோபதேசமும் பெற்றான்

பார்த்தனுக்காக உண்டான கோவிலானதால் பார்த்தன் பள்ளியாயிற்று. பார்த்தனாகிய அர்ஜூனனுக்கு இவ்விடத்து ஒரு கோவில் உண்டு.

## மூலவர்

தாமரையாள் கேள்வன். மேற்கு நோக்கி நின்ற திருக்கோலம்.

## உற்சவர்

பார்த்த சாரதி

## தாயார்

தாமரை நாயகி

## தீர்த்தம்

கட்க புஷ்கரணி

## விமானம்

நாராயண விமானம்

## காட்சி கண்டவர்கள்

அர்ஜூனன், வருணன், பதினொரு வடிவமெடுத்த சிவன்.

## சிறப்புக்கள்

1) வருணன் இவ்விடத்து திருமாலைக்குறித்து கடுந்தவமியற்றித் தனக்கு பார்த்தசாரதியாக காட்சியளிக்குமாறு வேண்ட அவ்விதமே நடந்தபடியால்

பார்த்த சாரதி பள்ளியென வழங்கி பிறகு பார்த்தன் பள்ளியாயிற்றென்பர்.

2) அகத்தியர், கௌதமர், பரத்வாஜர் போன்றவர்கள் இவ்விடத்தே தவம் செய்தனர்.

3) கண்ணனிடமிருந்து கத்தியைப் பெற்றுக் கீறி தீர்த்தம் உண்டாக்கியதால் (கட்க-கத்தி) கட்க புஷ்கரணியாயிற்று.

4) அர்ஜூனனுக்கும் இவ்விடத்து ஒரு கோவிலிருப்பது ஒரு தனிச்சிறப்பாகும்.

5) அகத்தியமுனிவர் நடந்தாய் வாழி காவேரி என்று காவிரித்தாயைத் தரிசித்துக்கொண்டே அதன் பாதையில் நடந்து வந்தவர் இந்த இடத்தைத் தாண்டிச் செல்லாது இங்கேயே காவிரி தரிசன பயணத்தை முடித்துக் கொண்டு தங்கிவிட்டார். ஆங்காங்கே அகத்தியருக்கு சிறிய சிறிய கோவில்கள் அமைந்திருந்தாலும் இங்கிருப்பதுதான் கடைசியானதாகும்.

6) பார்த்த சாரதி என்ற பெயரில் திருவல்லிக்கேணியில் எழுந்தருளியுள்ள பெருமாள் இரண்டு கைகளுடன் வீரம் ததும்பும் முகத்துடன் உள்ளார். இங்கு சங்கு சக்கரங்களுடன் நான்கு புஜங்களுடன் சாந்தம் தவழும் வதனத்துடன் திகழ்கிறார்.

7) திருமங்கையாழ்வார் 10 பாசுரங்களில் மங்களாசாசனம் செய்துள்ளார்.

8) கீழ்வரும் பாடலில் தாமரையாள் கேள்வன் என்று இப்பெருமானின் திருநாமத்தை பொய்கையாழ்வார்

குறிப்பிடுவதால் இத்தலத்தை அவரும் மங்களாசாசனம் செய்துள்ளதாகக் கூறுவர்.

**பெயருங் கருங்கடலே நோக்குமாறு, ஒண்பூ**
**உயரும் கதிரவனே நோக்கும் – உயிரும்**
**தருமனையே நோக்குமொண் டாமரையாள் கேள்வன்**
**ஒருவனையே நோக்கும் உணர்வு**

(முதல் திருவந்தாதி–67)

இருப்பினும் பார்த்தன் பள்ளி என்று ஸ்தலத்தின் பெயரைக் குறிப்பிடாததால் மங்களாசாசனம் எனக் கொள்வதற்கில்லை யென்பர்.

வேங்கடவன் என்னுஞ்ச் சொல்லால் திருமலைநாதனை மறைமுகமாக உணர்த்தும் பாசுரங்களை திருமலைக்கு மங்களாசாசனமாக எடுத்தாண்டுள்ளமையால் இந்தப் பிராட்டியின் பெயரைத் தெளிவாகக் குறிப்பிடுவதால் இத்தலத்தை பொய்கையாழ்வாரும் மங்களாசாசனம் செய்துள்ளார் என்றே கொள்ளலாம்.

9) “யாக்ஞவல்ய ஸ்ம்ருதி” என்ற வடநூலும் இத்தலத்தைப் பற்றி பேசுகிறது.

10) “செய்யருகே புனல்பாய பணைத்தோள் பாகம் பாம்பனையான்” என்பது சம்பந்தரின் பாட்டு, பாம்பனை என்ற சொற்றொடரில் இத்தலத்தையே இவர் குறிக்கிறார். சிவபெருமான் பாம்பை தலையில் சூடிக்கொண்டார். ஆனால் திருமாலோ பாம்பை படுக்கையாகக் கொண்டார். எனவே பாம்பனையான் என்ற சொல்லால் இத்தலத்தையே குறித்ததாகவும் கூறுவர்.

11) திருநாங்கூர் 11 திருப்பதிகளில் ஒன்றான இத்தலம் பலாசவனச் ஷேத்திரம், புரசங்காடு என்று அழைக்கப்படும் பகுதியில் அமைந்துள்ளது. பலாசவனம் என்பதும் இத்தலம் உள்ள பகுதியோடு முடிவடைகிறது.

12) இங்குள்ள கட்க புஷ்கரணி கங்கா தீர்த்தம் என்றும், விஷ்ணு பாத தீர்த்தம் என்றும் சொல்லப்படுகிறது.

13) திருமங்கையாழ்வார் ஒவ்வொரு வருடமும் தை அமாவாசைக்கு மறு நாள் இங்கே எழுந்தருளி மங்களாசாசனம் செய்வதாக ஐதீஹம்.

14) பார்த்தன் பள்ளி, பார்த்தன் பள்ளி என்றே மங்களாசாசனம் இருப்பதால் இது அர்ஜூனனுக்காக உண்டான ஸ்தலம் என்பது தெளிவு. அர்ஜூனனுக்குத் தோழனாக இருந்த கண்ணன் அவ்விதமாகவே இங்கு காட்சி கொடுத்தது ஒரு தனிச்சிறப்பு. ஆலயத்தின் அருகேயுள்ள கட்க புஷ்கரணியும், எம்பெருமான் இடையில் கத்தி வைத்திருப்பதும், இங்கு கத்தியால் தரையைக் கீறி கங்கையைக் கொணர்ந்ததற்கு அடையாளமாயிற்று.

15) தசரதன் இவ்விடத்தில் ஒரு யாகஞ்செய்ததாகவும் ஐதீஹம்.


16) பதினொரு பெருமாள்களில் ஒருவராக இங்கு எழுந்தருளிய இப்பெருமாள் குருக்ஷேத்திரத்திலிருந்து வந்தவரென்றும், திருவல்லிக்கேணி பார்த்தசாரதியே இங்கு வந்தாரென்றும் சொல்வர். திருவல்லிக்கேணி பெருமாளே இங்கு வந்ததாகக் கொள்வர். ஏனெனில்

திருவல்லிக்கேணியில் இருப்பவர் குருஷேத்ர போரை நடத்திய பார்த்த சாரதியல்லவா?

17) மூலவர், உற்சவர், இருவருக்குமே ஸ்ரீதேவி, பூதேவி, நீளாதேவி என்று மூன்று தேவி மார்கள் புடை சூழ இருப்பது 108 திவ்ய தேசங்களில் இங்கு மட்டும்தான். இவர் பார்த்தசாரதியான கண்ணபிரானல்லவா? எனவே தேவிகள் புடைசூழ இருப்பதில் அதிசயமென்னவுள்ளது.

18) இங்குள்ள மற்றொரு உற்சவருக்கு கோலவில்லிராமன் என்ற ஒரு பெயரும் உண்டு. சங்கு, சக்கரம், கதை இவற்றுடன் வில்லும், அம்பும், கொண்டு திகழ்கிறார் இவர். இவருக்கும் ஒரு தனி மூலவர் இருக்கிறார். அவரது கோவில் இங்கிருந்து சற்று தொலைவில் உள்ள ஒரு தோப்பில் இருக்கிறது. தை மாதம் பூச நட்சத்திரத்தன்று இங்கு நடைபெறும் தீர்த்தவாரி மிகச்சிறப்பான விழாவாகும். சரம சுலோகார்த்தம் விளங்கிய இடமும் இதுதான்.

19) இந்த உற்சவரான கோலவில்லி ராமன் என்னும் பெயரே திருவெள்ளியங்குடி திவ்ய தேசத்து மூலவருக்கும் அமைந்திருப்பது ஆராய்ச்சிக்குரிய ஒரு செய்தியாகும்.


Thirunagari
45A
Perunthottam
Mangaimadam
45A
Nangur
Thiruvengadu
Parthanpalli
East St
45A
Manigramam
Melaiyur
Pompuhar
Kaveri River
22
22
Mudikandanallur
Thalachangadu
22
Ponsei
Kizhaperumpallam
Vanagiri
Google
Map data ©2015 Google